


# கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

---

---

## தொழில்நுட்ப மற்றும் மருத்துவ விஞ்ஞானம் பற்றிய தென்கிழக்காசிய  நிறுவனத்தை (SAITM) மாதிரியாகக் கொண்டு தனியார் துறையின் பங்களிப்புடன் இலங்கையில் மருத்துவக் கல்வியை விஸ்தரித்தல்

---

## உயர் கல்வி பற்றிய உப குழுவின்

**2016** நவம்பர்மாதம் **23** ஆம்திகதி புதன்கிழமை

**உயர் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வை உப குழு**

உயர் கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் , ஆராய்ச்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளை கண்காணிப்பதற்காக இலங்கை பாராளுமன்றத்தின் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் நியமிக்கப்பட்ட உயர் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வை உப குழு நியமிக்கப்பட்டது.

**தற்போதைய உறுப்பினர்கள்**

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க (தவிசாளர்)

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

**அதிகாரங்கள்**

பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் ஒன்றான இக் குழுவிற்கு உள்ள அதிகாரங்கள் இலங்கை பாராளுமன்றத்தில் 2015 திசம்பர் 19 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை WWW.parliament.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கெள்ள முடியும்.

**வெளியீடு**

குழுவின் அறிக்கைகளும் சாட்சிகளும் பாராளுமன்றத்தின் கட்டளைகளுக்கு அமைய பாராளுமன்ற குழு அலுவலகத்தினால் வெளியடப்படும். குழுவின் வெளியீடுகள் யாவற்றையும் (பத்திரிகை விளம்பரங்கள் உட்பட்ட) WWW.parliament.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**குழு அலுவலக பணியாட்டொகுதி**

குழுவின் தற்போதைய பணியாட்டொகுதி – திரு.டிக்கிரி கே. ஜயதிலக்க, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் , திரு. ஜே. கஜவீரஆரச்சி, பணிப்பாளர் , சட்டவாக்க சேவைகள், திருமதி இந்திரா திஸாநாயக்க, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), குழு அலுவலகர்கள் –திரு.ஏ.எம்.நிலாமுதீன், பிரதான உத்தியோகத்தர், திருமதி சுஜீவி கமகே, பிரதி பிரதான உத்தியோகத்தர்.

**அறிவித்தல்**

ஆவணங்கள் யாவும் உயர் கல்வி பற்றிய பாராளுமன்றத்தின் துறைசார் உப குழு , குழு அலுவலகம், இலங்கை பாராளுமன்றம் , ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். பொதுவான விபரங்களுக்காக 011-2777100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள்**

கௌரவ வடிவேல் சுரேஷ்
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ லசந்த அலகியவன்ன
கௌரவ காமினி லொக்குகே
கௌரவ நிஹால் கலப்பத்தி
கௌரவ சிறினால் டி மெல்
கௌரவ க. துரைரெட்ணசிங்கம்
கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்
கௌரவ சி. சிறீதரன்
கௌரவ வேலு குமார்
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ
கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா
கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்
கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ அங்கஜன் இராமநாதன்
கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்
கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

## உள்ளடக்கம்

## அறிக்கை

## சாராம்சம்

1. **அறிமுகம்.........................................................................................................9**

1.1 தற்போது SAITM எதிர்நோக்கிவரும் பிரச்சினை...............................................................10

2. **அரச - தனியார் பங்கேற்புடன்** SAITM **மருத்துவ மாணவர்களுக்கான சிகிச்சை பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை விஸ்தரிக்கும் பிரேரணை**...............................................................................11

2.1 பின்னணி ..........................................................................................................11

2.2 நெபபோ வைத்தியசாலையின் நோயாளர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள். ............................................................ 11

2.2.1 நெபபோ வைத்தியசாலையை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்..........................................................................................11

2.2.2 நெபபோ வைத்தியசாலையின் முகாமைத்துவம்.............................. .................12

2.2.3 நெபபோ வைத்தியசாலையின் பணியாட்டொகுதியின் சம்பளம்..........................12

2.2.4 நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையின் மருத்துவ மாணவர்களுக்காக மேலதிக போதனா வைத்தியசாலையாக அவிசாவளை, முல்லேரியா மற்றும் ஹொரணை அரசாங்க வைத்தியசாலைகளை இணைத்தல் ....................................13

2.2.5 SAITM மாணவர்களுக்காக MOH பிரதேசமொன்றைப் பெயரிடல் .....................13

2.2.6 நீதிமன்ற வைத்திய அதிகாரி (JMO)........................................................................13

2.3 முடிக்கப்படாத வேலைகளை நிறைவு செய்தல் (இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்)..............................................................................................14

2.3.1 அனைத்து விஷேட விடயங்களுக்கும் அவிசாவளை ஆரம்ப வைத்தியசாலையினைப் பயன்படுத்துவதற்கான அனுமதி.................................14

2.3.2 மாணவர் நெருக்கடியினைத் தளர்த்தல்...............................................................14

3. **SAITM மருத்துவப் பட்டம் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தும் கட்டமைப்பில் தரத்தைப் பேணுதல்.........................................................................................................15**

3.1 SAITM மருத்துவ பீடத்திற்காக தெரிவுசெய்யப்படும் போதான அளவுகோல்கள்............15

3.2 SAITM தொடர்பில் மேற்பார்வை நிறுவனமொன்றை நியமித்தல்..................................15

3.2.1 பின்னணி........................................................................................................15

3.2.2 SAITM தொடர்பிலான கண்காணிப்பு நிறுவனம் பற்றிய எண்ணக்கரு : அது ஏன் தேவைப்படுகின்றது?........................................................................................16

3.2.3 கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்புகள்........................................................16
3.2.4 கண்காணிப்பு நிறுவனத்தின் உத்தேச உள்ளடக்கம் ........................................17
3.3 பரீட்சைகளின் தரம்..................................................................................................18
3.3.1 சைடம் மாணவர்களின் மருத்துவ பட்டப்படிப்பு இறுதிப் பரீட்சை.....................18

**4. அரசாங்கத்தின் பொறுப்புகள்..........................................................................19**
4.1 உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசு மற்றும் பமாஆ வின் பொறுப்புகள்........19
4.2 சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பொறுப்புகள்.......................19
4.3 இலங்கை மருத்துவ சபையின் பொறுப்புகள்....................................................................20
4.4 சைடம் இன் பொறுப்புகள்.............................................................................................20

**5. இலங்கை தனியார் மருத்துவ விஞ்ஞான கல்வியின் எதிர்கால முன்னேற்றம் தொடர்பிலான நீண்டகால முன்னெடுப்பு...........................................................................21**
5.1 பின்னணி.......................................................................................................................21
5.2 தனியார் மருத்துவ கல்லூரியொன்றை நிறுவுதல்...........................................................21
5.3 அரசாங்கம் பெறும் நன்மைகள் .......................................................................................22

**6. முடிவுகளும் சிபாரிசுகளும்.............................................................................24**
6.1 முடிவுகள்......................................................................................................................24
6.2 சிபாரிசுகள்...................................................................................................................24

# சாராம்சம்

இலங்கை சுகாதாரத் துறையின் வெற்றி பெரும்பாலும் அதன் செயற்பாட்டு ரீதியான பொது சேவையில் தங்கியுள்ளது. அரசாங்கம் நாட்டு மக்கள் சகலருக்கும் இலவசமாக சுகாதார சேவையை வழங்கிவருவதுடன் சுகாதார துறையில் இருக்கும் நிபுணத்துவ வைத்தியர்களின் எண்ணிக்கை போதிய நிலையில் இல்லை. இவ்வாறான மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்குள்ள எதிர்ப்பார்ப்புப் பட்டியல் மிகவும் நீண்டதாகவுள்ளது. கிராமிய மற்றும் நகர பிரதேச சேவை வழங்கலுக்கிடையே முரண்பாடுகள் நிலவிவருவதுடன் நாட்டில் நிலவிவந்த சிவில் யுத்தநிலை பாதிப்புகளால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. 2012ஆம் ஆண்டின் தரவுகளுக்கு அமைய நாட்டில் இருக்கும் தகைமைகளுடைய வைத்தியர்களின் எண்ணிக்கை மொத்தம் 17129 (1187 பேருக்கு ஒரு வைத்தியர் வீதம்) ஆகும். ஆயினும் இலங்கையில் நல்ல சுகாதார நிலையை ஏற்படுத்துவதற்காக அதனை 670 பேருக்கு ஒரு வைத்தியர் என்றவாறு அதிகரிக்கப்பட வேண்டும். உலக சுகாதார அமைப்பின் சிபாரிசுகளுக்கு அமைய நாட்டில் 40000 வைத்தியர்கள் இருக்கவேண்டியபோதிலும் 25000 வைத்தியர்களுக்கான பற்றாக்குறை நிலவிவருவதாக தெளிவாகியுள்ளது.

- **நாம் இப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எவ்வாறு?**

வருடாந்தம் 1100 வைத்தியர்கள் மட்டுமே அரச வைத்திய விஞ்ஞான பீடங்களிலில் பட்டம் பெற்றுவருவதால் இந்த இடைவெளியை நிரப்புவதற்காக இன்னும் 19 வருடங்கள் செல்லும். உயிரியல் பிரிவில் உயர் கல்வி கற்பதற்குத் தகுதிபெறும் அன்னளவாக 82 % மாணவர்களுக்கு அரச பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பு இழக்கப்படுகின்றது. நாடு தற்போது எதிர்நோக்கிவரும் நிதி நெருக்கடி காரணமாக நாட்டில் அதிகரித்துவரும் கேள்வியை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான புதிய மருத்துவ பீடங்களை ஆரம்பிக்கும் இயலுமை அரசாங்கத்துக்கு இல்லை .அதன் விளைவாக கட்டணமின்றி பல்கலைக்கழக கல்வியை மேற்கொள்ள முடியாத அன்னளவாக 10,000 மாணவர்கள் பல்கலைக்கழக கல்விக்காக வெளிநாடு செல்வதற்கு அல்லது வருடாந்தம் இல்லையிலிருந்தவாறு வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டப்படிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். வெளிநாட்டு பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொள்வதற்காக வெளிநாடு செல்லும் மாணவர்களாலும் வெளிநாடுகளில் கல்வி கற்றுவரும் இலங்கை தொழில்முயற்சியாளர்களின் பிள்ளைகள் தமது பட்டப்படிப்பின் பின் நாடு திரும்பாததன் ஊடாகவும் நாட்டின் அறிவியலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை பரவலாக நிகழ்ந்துவருகின்றது. அறிவியலாளர்களான இம் மாணவர்களின் பெற்றோர்களும் மாணவர்களுடன் நாட்டைவிட்டு வெளியேறுவதால் அறிவியலாளர்களான பெற்றோரையும் நாடு இழக்கின்றது.

இலவசக் கல்வி கொள்கையின் உண்மை நிலையை நுணுக்கமாக ஆராய்வதன் ஊடாக இன்று நூற்றுக்கு நூறு வீதமான இலவசக் கல்வி இலங்கையில் இல்லையென்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இலவசக் கல்வி முறையெனக் கூறிக்கொள்ளும் முறையின் கீழ் பாடசாலையில் சேர்வதற்கான கட்டணம் , ஆரம்பக் கல்வி தொடக்கம் இரண்டாம் நிலை பாடசாலை மட்டம் வரையான எல்லா பாடங்களுக்குமான பிரத்தியேக வகுப்பு கட்டணங்கள், வேறு கட்டணங்கள் மற்றும் செலவுகளை பெற்றோர்களால் பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் மாணவர் சமூகத்தின் தீவிரமான தேவைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்காக தனியார் நிறுவனங்களை இணைத்துக்கொள்ளும் தேவை ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலை, போக்குவரத்து (தனியார் பஸ்), ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை (தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகள்) போன்ற தனியார் துறைக்கு அரசாங்கம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதால், பல்கலைக்கழகங்களை தாபிப்பதற்கும் அரசாங்கம் தனியார் துறைக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். சர்வதேச பாடசாலையில் மருத்துவக் கல்வியை மேற்கொள்ளுவதற்குத் தேவையான மாணவர்களுக்கு அதற்காக இலங்கையில் ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி மட்டுமே இருப்பதாலும் அதுவும் செயற்படுத்த முடியாது பிரச்சினைகளுக்கு மத்தியில் இருப்பதாலும் அவர்கள் வெளிநாடு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. GMOA மற்றும் அரச பல்கலைக்கழக மாணவர்கள் SAITM மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பயிற்சிகளை மேற்கொள்வதற்கும் SLMC பதிவு செய்துகொள்வதற்கும் இடமளிப்பதில்லை.

இலங்கையிலுள்ள ஒரே தனியார் மருத்துவக் கல்லூரியானது தொழில்நுட்ப மற்றும் மருத்துவ விஞ்ஞானம் பற்றிய தென்கிழக்காசிய நிறுவம் (SAITM) இலங்கை மருத்துவ சபை

ஆகும். எனினும் இம் மாணவர்கள் பதிவு செய்துகொள்வதை இலங்கை மருத்துவ சபை (SLMC) நிராகரித்துள்ளது.

தமது மாணவர்களுக்கு போதியளவு சிகிச்சை பயிற்சிகள் இருப்பதாக SAITM தெரிவிக்கின்றபோதிலும் அது தொடர்பில் இலங்கை மருத்துவ சபை இணங்குவதில்லை. இலங்கை மருத்துவ சபை கோரியுள்ளதற்கு இணங்க தீர்ப்பளிப்பதற்காக எஞ்சியுள்ள ஒரே பிரச்சினை போதியளவில் சிகிச்சை பயிற்சிக்கு வசதியளித்தல் ஆகும். இலங்கை மருத்துவ சபை எவ்வித நிபந்தனைகளுமின்றி ஏற்றுக்கொள்ளும் வெளிநாட்டு மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் சிகிச்சை பயிற்சியைவிட அதிகளவிலான சிகிச்சை பயிற்சிகளை SAITM மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றார்கள்.

பின்வரும் மூன்று முறைகளினால் அதனை தீர்த்துவைக்க முடியுமென சிபாரிசு செய்யப்படுகின்றது. அரச மற்றும் பங்குடமை முறையில் SAITM மருத்துவ மாணவர்களின் சிகிச்சை பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல், கண்காணிப்பு நிறுவனமொன்றினால் சைடம் மருத்துவ பட்டத்தின் தரத்தினை பேணல் மற்றும் நீண்டகால திட்டமாக இலங்கை தனியார் மருத்துவக் கல்வியின் எதிர்கால மேம்பாட்டினை மேற்கொள்ளல்.

அரச தனியார் கூட்டு வர்த்தகத்தின் ஊடாக SAITM மருத்துவ மாணவர்களின் சிகிச்சை வசதிகளை விரிவுபடுத்தும் பிரேரணையை பின்வரும் நடவடிக்கைகளின் ஊடாக நிவர்த்தி செய்ய முடியும்.

**அரச –தனியார் போதனா வைத்தியசாலையை (NFTH)(நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலை) சுவீகரித்தல்**

நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அரச வைத்தியசாலையாக செயற்படுத்த வேண்டும். நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையிலுள்ள 1000 கட்டில்களில் 100 கட்டில்கள் தனியார் துறை என்ற வகையில் செயற்படுத்தல் வேண்டும். அவிசாவலை, முல்லேரியா மற்றும் ஹொரண வைத்தியசாலைகளை மேலதிக போதனா வைத்தியசாலைகளாக இணைத்துக்கொள்ள வேண்டும். SAITM மாணவர்களுக்கு சிகிச்சை பயிற்சிகளை வழங்குவதற்கான கட்டணமொன்றை பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் கலந்தாலோசித்த பின்னர் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் SAITM ஊடாக தீர்மானிக்கப்பட வேண்டும். விசேடமாக கடுவெல உட்பட்ட இன்னுமொரு பிரதேசத்தையும் மருத்துவ விஞ்ஞானம் கற்பிப்பவர்களுக்கான சுகாதார மருத்துவ பிரதேசமாக ஒதுக்கப்பட வேண்டும். தடயவியல் மருத்துவ அலுவல்களில் ஈடுபடுவதற்காக இவ் வைத்தியசாலை தொடர்பில் நீதிமன்ற வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

**எஞ்சிய வேலைகளை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும்.**

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் இணக்கம் தெரிவிக்கப்பட்டவாறு மருந்துகள், சத்திர சிகிச்சைகள், பிரசவ மற்றும் மகப்பேற்று, மனநோய்க்கான சிகிச்சை மற்றும் வேறு முக்கிய நோய்கள் தொடர்பில் அவிசாவலை வைத்தியசாலையைப் பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு அங்கீகாரம் வழங்க வேண்டும். SAITM மாணவர்கள் இதுவரை தடயவியல் மற்றும் மனநோய் சிகிச்சைகள் தொடர்பில் மட்டுமே அவிசாவலை வைத்தியசாலையை பயன்படுத்திவருகின்றபோதிலும் கண், ENT போன்ற பல உப பிரிவுகள் அவ் வைத்தியசாலையில் காணப்படுகின்றன. மாகாண பொது வைத்தியசாலைகள் மற்றும் தள

வைத்தியசாலைகள் சிலவற்றுக்கும் மாணவர் குழுவொன்றை விடுவிப்பதனை தொடர்புபடுத்த வேண்டும். கலுத்துறை, கம்பஹ, கரவநெல்ல, வத்துபிட்டிவல, நாவலபிட்டிய, மாத்தளை மற்றும் நுவரெலியா அதற்குப் பொறுத்தமான வைத்தியசாலைகள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

SAITM மருத்துவ பட்ட நிகழச்சித் திட்டத்தின் தரத்தை பாதுகாப்பதும் முக்கியமானதாகும். அதன் ஊடாக நாட்டின் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். தரத்தினை பேணுவதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அது தொடர்பில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு பல பொறுப்புகள் இருக்கின்றன.

SAITM மருத்துவக் கல்லூரிக்கு திடமான தேர்ந்தெடுக்கப்படுவதில் முறைமையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட வேண்டும். உயர் தரத்தில் இரண்டு “C” சித்திகளும் ஒரு “S” சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான வகையில் லண்டன் உயர் தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அரச மருத்துவ பீட நுழைவை ஒவ்வொரு மாவட்டத்திலும் மட்டுமட்டாக இழந்த மாணவர்களுக்காக 20 பூரண புலமைப்பரிசில்களை SAITM வழங்க வேண்டும்.

SAITM தொடர்பிலான கண்காணிப்பு நிறுவனமொன்று பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவினால் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன் SAITM புதிய கட்டமைப்பு சரியான முறையில் செயல்வலுப்படுத்தப்படும்வரை அது பிரதான கண்காணிப்பு குழுவாக செய்பட வேண்டும். SAITM மாணவர்களின் மருத்துவப் பட்டப்படிப்பின் இறுதிப் பரீட்சையானது அரச மருத்துவ பீடங்கள் தொடர்பில் பலல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள் மற்றும் தரத்துக்கமைய நடாத்தப்பட வேண்டும். 2016 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட முதலாம் மற்றும் இரண்டாம் மருத்துவப் பட்டப்படிப்பு இறுதிப் பரீட்சைகள் மேற்குறிப்பிட்ட முறையில் நடாத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இலங்கை தனியார் மருத்துவக் கல்வி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான நீண்டகால திட்டமாக அரச மருத்துவ பீடங்களுக்கான கட்டணங்களை அறவிடும் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதாகும்.

## 1. அறிமுகம்

பல்கலைக்கழக பிரவேசத்துக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் இலங்கை மாணவர்களில் 82% மானவர்களுக்கு எமது நாட்டு பல்கலைக்கழக பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. அதனால் அரச பல்கலைக்கழகங்களுக்கு நமது நாட்டில் அதிகரித்துவரும் தேவையை நிவர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரச பல்கலைக்கழக பிரவேசத்தை இழக்கும் மாணவர்களின் மனநிலையை கவனத்திற்கொள்ளும்போது அது காலம் தாழ்த்த முடியாத தீவிர பிரச்சினையாக உள்ளதாகத் தெரிகின்றது.

அரச பல்கலைக்கழகங்களுக்கான நுழைவு கிடைக்கப்பெறாத மாணவர்களின் துரித தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தனியார் நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் தேவை எழுந்துள்ளது. நிதி நெருக்கடி காரணமாக அவ்வாறான பல்கலைக்கழகங்களில் கூடுதலான சந்தர்ப்பங்களை வழங்கும் இயலுமை அரசாங்கத்துக்கு இல்லை.

ஆகவே மாணவர்களின் உயர் கல்வி தொடர்பில் தேவை / நிறைவு என்பவற்று;கு இடையேயான இடைவெளியினை குறைப்பதற்காக துரித தீர்வுகள் பெறப்படல் அவசியமாகவுள்ளது.

நாட்டில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் வைத்தியர்களின் பாரிய பற்றாக்குறை பிரதான தடையாகவுள்ளது. 2009 ஆம் ஆண்டுவரை நாட்டில் எந்தவொரு தனியார் மருத்துவக் கல்லூரியும் இல்லாதிருந்ததால் கேள்வி மற்றும் சமூக காரணிகளால் பெருந் தொகையான மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை நோக்கிச் செல்கின்றனர். பொருளாதார ரீதியில் நோக்குமிடத்து வெளிநாட்டு செலாவணி இழப்பு மற்றும் அறிவாளர்களின் வெளியேற்றம் நாட்டுக்கு சுமையாகவுள்ளது. அவ்வாறான அதிகமான பல்கலைக்கழங்கள் தரமற்ற மருத்துவக் கல்வியை பெற்றுக்கொடுக்கின்றன. வெளிநாட்டு மருத்துவப் பட்டம் பெற்ற மாணவர்களை ஏற்றுக்கொள்வதற்காக இலங்கை மருத்துவ சபையினால் நடாத்தப்படும் ERPM பரிட்சையில் பல மாணவர்கள் சித்தியடையாததன் ஊடாக அக் குறைபாடுகள் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தற்போதுள்ள ஒரே தனியார் மருத்துவக் கல்லூரி SAITM ஆகும்.

SAITM முதலாவது மருத்துவத்துறை மாணவர்கள் குழு மருத்துவ பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. அவர்களை சட்டரீதியாக ஏற்றுக்கொள்வதற்கு மருத்துவ சபை மறுப்பு தெரிவித்துள்ளதன் காரணமாக அவர்கள் இலங்கை வைத்தியசாலைகளில் மருத்துவர்களாக செலாற்ற முடியவில்லை.

SAITM மாணவர்களுக்கு சிகிச்சை பயிற்சிகளைப் பெற்றுக்கெள்ளுவதற்காக போதிய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளபோதிலும் அதனை இலங்கை மருத்துவ சபை ஏற்றுக்கொள்ளாது. நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளும் சிகிச்சை பயிற்சியை மட்டும் இலங்கை மருத்துவ சபை ஏற்றுக்கொள்கின்றபோதிலும் ஆசிரி வைத்தியசாலைசர்ஜரீஸ், லங்கா ஹொஸ்பிடல்ஸ், நவலோக்க வைத்தியசாலை மற்றும் ஓவர்சீஸ் வைத்தியசாலை ஆகிய கொழும்பிலுள்ள முதல் நிலை வைத்தியசாலைகள் SAITM மாணவர்களுக்கு சிகிச்சை பயிற்சிகளை வழங்கிவருகின்றன. அப் பயிற்சிகள் இந்நாட்டு முதல் நிலை ஆலோசகர்களின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.1 தற்போது SAITM எதிர்நோக்கிவரும் பிரச்சினை

SAITM மருத்துவ பட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு எதிரான பிரச்சினைகளை ஆராய்வதற்காக இலங்கை மருத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின் ஊடாக அப்பிரச்சினைகள் குறிப்பிடத்தக்களவு தீர்த்துவைக்கப்பட்டுள்ளன.(அவிசாவலை தள வைத்தியசாலையின் தடையவியல் மருத்துவம், சமூக மருத்துவ பிரிவுகளின் மற்றும் கடுவெல சுகாதார அதிகாரியின் அலுவலகம் தொடர்பான) இலங்கை மருத்துவ சபை ஏற்றுக்கொளள்ளும் வகையில் தீர்க்கப்பட வேண்டிய ஒரே பிரச்சினை போதியளவில் சிகிச்சை பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் இல்லாமை ஆகும்.

இக் குறிப்பின் நோக்கம் பின்வரும் முக்கியமான மூன்று இலக்குகளின் அடிப்படையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதாகும்.

1. SAITM மருத்துவ மாணவர்களின் சிகிச்சை பயிற்சிக்கான வசதிகளை விஸ்தரித்தல்
2. SAITM மருத்துவ பட்ட நிகழச்சித் திட்டத்தின் தரத்தினை பேணுதல்
3. இலங்கையின் எதிர்கால தனியார் மருத்துவக் கல்வியை விஸ்தரித்தல்

மேற்குறிப்பிட்ட மூன்று நோக்கங்கைளையும் பின்வரும் பிரதான முறைமைகளின் கீழ் தீர்க்க முடியும்.

- தனியார்-அரச பங்குடமை
- கண்காணிப்பு நிறுவனம்
- நீண்டகால திட்டங்கள்

## 2. அரச - தனியார் பங்கேற்புடன் SAITM மருத்துவ மாணவர்களுக்கான சிகிச்சை பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை விஸ்தரிக்கும் பிரேரணை

### 2.1 பின்னணி

SAITM மாணவர்களுக்கு சிகிச்சை பயிற்சிகளை வழங்குவதற்காக தற்போதுள்ள பிரதான போதனா வைத்தியசாலை நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலை ஆகும். அது நாட்டிலுள்ள முதல்நிலை வைத்தியர்கள் பணிபுரிந்துவரும் சகல தேவைகளுமுடைய வைத்தியசாலையானபோதிலும் அவ் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் மற்றும் அறவிடப்படும் கட்டணம் காரணமாக அங்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாகவுள்ளது. விபத்துகள் மற்றும் அவசர நிலையின்போது பொது மக்கள் அரச வைத்தியசாலைகளை நாடிச்செல்லும் நிலை காணப்படுவதால் SAITM மாணவர்களுக்கு விபத்துகள் மற்றும் அவசர நிலை தொடர்பான சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. நெவில் பர்னாது போதனா வைத்தியசாலையில் ஆரம்ப குழுவில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் அண்மையில் நியமிக்கப்பட்ட குழுவில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் வெற்றிகரமான சிகிச்சை பயிற்சிகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையின் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது .

### 2.2 NFTH வைத்தியசாலையின் நோயாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

#### 2.2.1 NFTH வைத்தியசாலையை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல்

எழுந்துள்ள பிரச்சினைக்கான துரித தீர்வாக NFTH வைத்தியசாலையை சுவீகரிக்க முடியும். அங்கு 1000 கட்டில்கள் இருப்பதுடன் அவற்றில் 900 கட்டில்களை கட்டணமின்றி நோயாளர்களுக்கு வழங்க வேண்டும். மீதி 100 கட்டில்களை இலங்கை தேசிய வைத்தியசாலையில் காணப்படுபவற்றைப் போல் கட்டணம் செலுத்தும் பிரிவாக ஒதுக்கப்பட வேண்டும். இலவசமாக வழங்கப்படும் 900 கட்டில்களில் 400 கட்டில்களை மருத்துவ, சத்திர சிகிச்சை, பிரசவ மற்றும் மகப்பேற்று, சிறுவர் நோய்கள், மனநோய்கள் ஆகிய (ஒரு பிரிவுக்கு 80 கட்டில்கள் வீதம்) ஐந்து பிரிவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஏனைய 400 கட்டில்களில் மருத்துவம், சத்திர சிகிச்சை, பெண்கள் மற்றும் பிரசவ, சிறுவர் நோய்கள், மனநோய்கள் ஆகிய (ஒரு பிரிவுக்கு 80 கட்டில்கள் வீதம்) ஒவ்வொரு பிரிவிற்காக கட்டில்கள் ஒதுக்கப்பட வேண்டும். அப்பிரிவுகளின் தலைமைத்துவம் சுகாதார, போசணை மற்றும் சுதேச

மருத்துவ அமைச்சினால் நியமிக்கப்படும் ஆலோசகர்களின் பொறுப்பில் இருக்க வேண்டும். மீதி பிரிவு ENT , கண், அங்கவீனம் ஆகிய அத்தியாவசியமான உப விசேட பிரிவுகளுக்காக ஒதுக்கப்பட வேண்டும். அந்த அலகுகள் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் நியமிக்கப்பட்ட சைடம் கல்விசார் பணியாட்டொகுதி அல்லது ஆலோசகர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். தனியார் பிரிவில் (கட்டணம் செலுத்தம் வாட்டு) 100 கட்டில்களை சைடம் கல்விசார் பணியாட்டொகுதியைச் சார்ந்த நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஓய்வுபெற்ற நிபுணத்துவ வைத்தியர்கள் தனியாருக்கான பகுதியில் செனல் நடவடிக்கையில் ஈடுபட முடியும் .

### 2.2.2. நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையின் (NFTH) முகாமைத்துவம்

வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் முகாமைத்துவக் சபை ஏன்பனவற்றின் நியமனங்கள் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் செய்யப்படும். முகாமைத்துவ சபை பின்வருமாறு அமைதல் வேண்டும்

- பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO)
- சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்
- உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்
- நிதி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்படும் ஒருவர்
- பிரதமரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற நால்வர்

இந்த சபை முழுமையாக செயற்படும் வரை இம் மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை உயர் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவினால் கண்காணிக்கப்படும். மேலும் அதன் மூலம் நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலை மற்றும் SAITM மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிற்கு இடையேயான செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்படும்.

### 2.2.3. நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையின் பணியாட்டொகுதியின் சம்பளம்

தொழிற்துறை அலகுகளின் ஆலோசகர்கள் மற்றும் பணியாட்டொகுதியின் (பேராசியார்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள்) சம்பளங்கள் SAITM மூலம் செலுத்தப்படுகின்றது.

சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் மூலம் நியமிக்கப்படுகின்ற வைத்திய ஆலோசகர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள், தாதிகள், இடைநிலை வைத்தியர்கள், தொழிலாளர்கள் மற்றும் பணியாட்டொகுதியினருக்கான சம்பளங்களை சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு செலுத்தும். இது தொடர்பான நாட்டின் ஏனைய போதனா வைத்தியாசாலைகளின்

செயன்முறையும் அதுவேயாகும். அனைத்து இடைநிலை தரங்களுக்கான வைத்தியர்கள் SR, பதிவாளர்கள் மற்றும் SHO ஆகியோரின் நியமனங்கள் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சி மேற்கொள்ளும். தாதிமார்கள், இடைநிலை வைத்தியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் அலுவலக பணியாட்டொகுதியினர் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் நியமிக்கப்படுவார்கள்.

தனியார் பிரிவின் ஊடாக கிடைக்கப்பெறுகின்ற வருமானம் வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படல் வேண்டும்.

### 2.2.4. நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையின் மருத்துவ மாணவர்களுக்காக மேலதிக போதனா வைத்தியசாலையாக அவிசாவளை, முல்லேரியா மற்றும் ஹொரண அரசாங்க வைத்தியசாலைகளை இணைத்தல்.

சிகிச்சைப் பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்காக பாரிய எண்ணிக்கையிலான மாணவர்கள் உள்ளதால் இந்த வைத்தியசாலைகள் இணைக்கப்படுகின்றமை அத்தியாவசியமாகும். சிரேஷ்ட மாணவர்கள் இதுவரையில் நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதோடு தற்பொழுது சிகிச்சைப் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மூன்று மாணவர் குழுக்கள் இருக்கின்றபோதிலும் சிகிச்சை பயிற்சி வசதிகள் இல்லாததன் காரணமாக குறித்த காலத்தில் பயிற்சியினை ஆரம்பிக்க முடியாதிருக்கின்றது. சிரேஷ்ட மாணவர்களும் குறிப்பிட்ட சிகிச்சை பயிற்சி எண்ணிக்கையினை இதுவரையில் முழுமையாக நிறைவேற்றவில்லை. அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பயிற்சியினைப் பெறும் அனைத்து மாணவர்கள் தொடர்பிலும் SAITM கட்டணம் செலுத்த வேண்டும். (இப்போதும் கூட KDU ஶ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு குறிப்பிட்ட தொகையினை செலுத்துகின்றார்கள்.) அரசாங்க மற்றும் SAITM எனும் இரண்டிற்கும் வைத்தியசாலை அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்ய முடியும்.

### 2.2.5. SAITM மாணவர்களுக்காக MOH பிரதேசமொன்றைப் பெயரிடல்

SAITM மருத்துவ பீடத்தில் MOH பிரதேசமாக போதனா செயற்பாடுகளுக்காக சமூக வைத்தியப் பிரிவின் பணியாட்டொகுதிக்கு எளிதான நுழைவாயிலொன்றாக இருக்கும் கடுவெலயினை வேறாக்குவது பொருத்தமானதாகும்.

### 2.2.6. நீதிமன்ற வைத்திய அதிகாரி (JMO)

நீதிமன்ற மருத்துவ விஞ்ஞானக் கல்விக்காக தெரிவுசெய்யப்படும் (SAITM) மாணவர்களுக்காக, மேலே குறிப்பிடப்படுகின்ற மூன்று அரசாங்க வைத்தியசாலைகளில் ஒரு வைத்திசாலைக்கு நீதிமன்ற வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார்.

### 2.3. முடிக்கப்படாத வேலைகளை நிறைவு செய்தல் (இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்)

#### 2.3.1. அனைத்து விஷேட விடயங்களுக்கும் அவிசாவளை ஆரம்ப வைத்தியசாலையினைப் பயன்படுத்துவதற்கான அனுமதி

இப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வொன்றாக வைத்திய, அறுவை சிகிச்சை, மகப்பேற்று விஞ்ஞானம் மற்றும் பிரசவ, மகப்பேற்றியல், குழந்தை மற்றும் ஏனைய நிபுணத்துவப் பிரிவு போன்ற மிகவும் விசேடமான சிகிச்சைப் பயிற்சிக்காக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சி தீர்மானிக்கின்ற குறிப்பிட்ட கட்டணத்தினை செலுத்தி அவிசாவளை வைத்தியசாலையினை பயன்படுத்துவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் அனுமதி வழங்குதல் வேண்டும். தற்பொழுது நீதிமன்ற மருத்துவ விஞ்ஞானம் மற்றும் உளவியல் மருத்துவ விஞ்ஞானத்துறை சிகிச்சைப் பயிற்சிக்காக மட்டும் SAITM மாணவர்கள் அவிசாவளை ஆரம்ப வைத்தியசாலையினைப் பயன்படுத்தப்படுகின்றார்கள்.

#### 2.3.2. மாணவர் நெருக்கடியினைத் தளர்த்தல்

தற்போதைய நெருக்கடியினைத் தளர்த்துவதற்கு மாகாணங்களிலுள்ள பொது வைத்தியசாலைகள் மற்றும் தள வைத்தியசாலைகள் சிலவற்றிற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ள முடியும். தாமதமாகிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு களுத்துறை, கம்பஹா, கரவனல்ல, வத்துபிட்டிவெல, நாவலபிட்டிய, மாத்தளை மற்றும் நுவரெலியா வைத்தியசாலைகளைப் பயன்படுத்துவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த வைத்தியசாலைகள் இதுவரை அரச மருத்துவக் கல்லூரி மாணவர்களால் சிகிச்சைப் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

<u>*தேவையான பணியாட்தொகுதியினர் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இருப்பதனால் இதனை உடனடியாக செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது.*</u>

குருணாகல் பொது வைத்தியசாலை, கம்பளை, மாவனல்ல மற்றும் கேகாலை தள வைத்தியசாலைகள் பேராதெனிய மருத்துவ பீடத்திற்கு இணைக்கப்பட்டு இவ்வாறான நடவடிக்கை ஒன்று இதற்கு முன்னரும் எடுக்கப்பட்டிருந்தது. இந்த வைத்தியசாலைகள் தற்பொழுது போதனா வைத்தியசாலைகள் எனப் பெயரிடப்பட்டுள்ளன.

## 3. SAITM மருத்துவப் பட்டம் நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்தும் கட்டமைப்பில் தரத்தைப் பேணுதல்.

### 3.1. SAITM மருத்துவ பீடத்திற்காக தெரிவுசெய்யப்படும் போதான அளவுகோல்கள்

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்புடன் மிகவும் கடுமையான வகையிலான தேர்ந்தெடுத்தல் அளவுகோல் பின்பற்றல் வேண்டும். சகல விண்ணப்பதாரிகளும் க.பொ.த. (உ/தரம்) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 2 திறமைச் சித்திகளையும் ஒரு சாதாரண சித்தியையும் அல்லது லண்டன் (உ/தரம்) பரீட்சையில் அதற்குச் சமமான சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

வெளிக்களச் செயற்பாடுகளிலான திறமை போன்ற அரசாங்க பல்கலைக்கழகங்கள் பின்பற்றக்கூடிய ஏனைய அனைத்து அளவுகோல்களையும் கருத்திற்கொள்ள முடியும். ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் மொத்த எண்ணிக்கையில் குறிப்பிட்ட வீதமொன்றை தொழில்சார் மற்றும் வரி செலுத்துவோரின் பிள்ளைகளுக்காக ஒதுக்க முடியும்.

அரசாங்க மருத்துவபீட அனுமதிக்கான Z வெட்டுப் புள்ளிகளைவிட மிகச் சிறிதளவில் குறைந்த மாணவர்களுக்காக 20 முழுமையான புலமைப் பரிசில்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்பட முடியும்.

### 3.2. SAITM தொடர்பில் மேற்பார்வை நிறுவனமொன்றை நியமித்தல்.

#### 3.2.1. பின்னணி

அரச பல்கலைக்கழகக்ளகங்களில் கல்வி, நிதி போன்ற சகல நடவடிக்கைகளும் பீட சபை, செனெட் மற்றும் சபை போன்ற பல்வேறு விதமான துறைகளினால் கண்காணிக்கப்படுகின்றது. கல்வி தொடர்பான நடவடிக்கைகள் அனைத்து மேற்பார்வை நிறுவனங்களினாலும் மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதோடு கல்வி சார் பணியாட்டொகுதியின் கண்காணிப்பு நிறுவனம் தயாரித்துள்ள தரக்கட்டுப்பாட்டினைப் பின்பற்றுவதற்கும் கட்டுப்பட்டுள்ளது. பல்கலைக்கழக நிருவாக முறைமையில் பல்கலைக்கழக சபையானது நிறைவேற்றதிகார நிறுவனமாவதோடு அது உப வேந்தருக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனமாகவும் செயற்படுகின்றது. இறுதியாக பல்கலைக்கழக சபையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) மற்றும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் பிரதான நிருவாக நிறுவனம் என்ற வகையில் இச் சபை அதன் சிறந்த முகாமைத்துவத்தையும் நலனையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அனைத்து நிதி நடவடிக்கைகள் மற்றும் கல்விச் செயற்பாடுகள் என்பனவற்றிற்கு பொறுப்பாகவுள்ளது.

## 3.2.2. SAITM தொடர்பிலான கண்காணிப்பு நிறுவனம் பற்றிய எண்ணக்கரு : அது ஏன் தேவைப்படுகின்றது?

SAITM மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான செயற்குழுக் கூட்டங்களில் கலந்துகொண்டும் அவர் அரசிற்கான மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கட்டுப்பட்டில்லை. ஏனென்றால், பீடாதிபதி மற்றும் ஏனைய பிரதான உத்தியோகத்தர்களை நியமிக்கின்ற அதிகாரிகளான தலைவர் மற்றும் இந் நிறுவனத்தின் உரிமையாளர்களான SAITM பணிப்பாளர் சபை என்பதாலாகும். அதன் காரணமாக, இந்த பிரதான பதவிகளுக்கிடையே மிகவும் பொருத்தமானவர்கள் இருக்கின்றார்களா என்பது பற்றி சந்தேகத்திற்குரியது. எனினும், அரசாங்க பல்கலைக்கழகங்களில் பீடாதிபதி பதவிக்கு திணைக்களத் தலைவர்களுக்கிடையே கூடிய வாக்குகளைப் பெற்றவர் நியமிக்கப்படுவார். SAITM நிருவாக அதிகார சபையின் தலைவர், வேந்தராகும் (டாக்டர் நெவில் பர்னாந்து). அரசாங்க பல்கலைக்கழகங்களைப் போன்று நிருவாகத்தின் இந்த ஏகபோக உரிமையானது பொறுப்புக் கூறக்கூடிய சில உறுப்பினர்களுக்கிடையே சமநிலைப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். அதன் காரணமாக தற்போதைய நிருவாகத்தினை கண்காணிப்பதற்காக கண்காணிப்பு நிறுவனமொன்று இருப்பது கட்டாயமானதாகும்.

## 3.2.3. கண்காணிப்பு நிறுவனத்தின் பொறுப்புக்கள்

(i) SAITM மருத்துவ மாணவர்களின் அனுமதிக்கான தகைமைகள், தற்போதைய SAITM மருத்துவ பீடத்திற்கு நுழைவதற்கான குறைந்த தகைமையாக அமைவது 2 திறமைச் சித்திகளும், 1 சாதாரண சித்தியும் ஆகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அரசாங்க மருத்துவ பீடத்திற்கு நுழைவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருப்பது 3 சாதாரண சித்திகள் மட்டுமேயாகும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை மருத்துவ சபையுடன் உடன்படிக்கை ஒன்று இருத்தல் அவசியமாகும்.

(ii) பீடாதிபதி, பிரிவுத் தலைவர் மற்றும் மாணவர்களின் உறுப்பினர் ஒருவருடன் (தெரிவுசெய்யப்பட்ட ஆண்டின் குழுவின் அதி உயர் புள்ளி பெற்ற மாணவர்) மிக நெருங்கிய தொடர்பின் மூலம் கல்வி நடவடிக்கைகளை கண்காணித்தல்.

(iii) நிதி நடவடிக்கைகளை கண்காணித்தல்: SAITM இன் மேலதிக அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் நலன்புரி விடயங்கள் போன்றன தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கை மருத்துவ சபை மற்றும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் நெருக்கமாகச் செயற்படல் மற்றும் SAITM மூலம் அதன் பட்டத்தினை

எதிர்பார்ப்பவர்களுக்கு பயிற்சி மற்றும் கல்வி பற்றிய தராதரம் என்பன கண்காணிப்பு நிறுவனத்தினால் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

SAITM மற்றும் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நிதி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக இரண்டு உத்தியோகத்தர்களை நியமித்தல் வேண்டும்.

நாட்டிலுள்ள சகல மருத்துவ பீடங்களின் தராதரம் பற்றி சான்றுப்படுத்தப்படுகின்ற சுயாதீன நிறுவனமொன்று நிறுவப்படும் வரை இந்த கண்காணிப்பு நிறுவனம் செயற்படவுள்ளது.

### 3.2.4. கண்காணிப்பு நிறுவனத்தின் உத்தேச உள்ளடக்கம்

(i) சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உறுப்பினர் ஒருவர் – பிரதிப் பணிப்பாளர் நாயகம் மிகவும் பொருத்தமானது (நிதி நடவடிக்கையினைக் கண்காணித்தல் வேண்டும்)

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்/உயர் கல்வி உறுப்பினர் ஒருவர் (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விடய ஒருங்கிணைப்பிற்காக)

(iii) இலங்கை மருத்துவ சபையின் தலைவரினால் நியமிக்கப்பட்ட இலங்கை மருத்துவ சபை உறுப்பினர் ஒருவர் (இலங்கை மருத்துவ சபையின் விடய ஒருங்கிணைப்பிற்காக)

(iv) பணிப்பாளர், நெவில் பர்னாந்து போதனா வைத்தியசாலை

(v) விசேட வைத்திய நிபுணர் சங்கத்தின் SAITM, மருத்துவ பீடத்தின் பணியாட்டொகுதியின் உறுப்பினர் ஒருவர்

(vi) பெற்றார் சங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் ஒருவர்

(vii) தலைவர், SAITM

(viii) SAITM மாணவர் உறுப்பினர் ஒருவர் (முன்னர் நடைபெற்ற பரீட்சையில் அதி கூடிய புள்ளியைப் பெற்ற மாணவர்)

(ix) பீடாதிபதி SAITM, மருத்துவ பீடம்

(x) சட்ட உத்தியோகத்தர், SAITM

(xi) கணக்காளர், SAITM

(xii) திணைக்களத் தலைவர்கள், SAITM

### 3.3. பரீட்சைகளின் தராதரம்

#### 3.3.1. SAITM மாணவர்களுக்காக MBBS மருத்துவப் பட்டம் இறுதியாண்டுப் பரீட்சை

SAITM மருத்துவ மாணவர்களுக்காக இறுதிப் பட்டத்திற்கான பரீட்சை 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் இறுதியாண்டு MBBS பரீட்சை இடம்பெற்ற விதமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அரசாங்க மருத்துவ பீடங்களுக்கு குறிப்பிடப்பட்டள்ள தரங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கேற்ப நடைபெறல் வேண்டும். பரீட்சைக் கட்டமைப்பு அதாவது பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு கட்டுரை வினாக்களின் எண்ணிக்கை, நீண்ட மற்றும் குறுகிய கால சிகிச்சைப் பரீட்சைகளின் கால எல்லைகள் மற்றும் வாய்மொழிப் பரீட்சை சமமானதாக இருத்தல் வேண்டும். ஏனைய மருத்துவ பீடங்களிலுள்ள பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் போதானா வைத்தியசாலைகளில் சிரேட்ட மருத்துவ ஆலோசகர்கள், வெளி கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் மாணவர்களின் அறிவைப் பரீட்சிப்பார்கள். இது வரை SAITM அதன் பரீட்சைகளை மேற்படி தரக்கொள்கைகளைப் பின்பற்றுவதன் ஊடாக நடாத்தியுள்ளது.

## 4. அரசாங்கத்தின் பொறுப்பு

இப்பிரேரணையினை நடைமுறைப்படுத்ததுவதற்காக உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலங்கை வைத்திய சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு அவசியமாகும். அரசாங்கத்தின் கொள்கை என்ற அடிப்படையில் பின்வரும் பொறுப்புக்கள் அமைச்சுக்கள், அமைப்புக்கள் மற்றும் கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தியும் பற்றிய பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்.

### 4.1. உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் பொறுப்புக்கள்

I. மேற்பார்வை நிறுவனங்களின் நடவடிக்கைகளில் தலையிடுதல்

II. நிருவாகத்தின் ஊடாக ஏனைய அரசாங்க மருத்துவ பீடங்களுக்கு சம்மாக வழங்கப்படும் அதே அளவிலான வசதிகளை SAITM இற்கு வழங்குதல்

III. MBBS இறுதிப் பரீட்சையில் சிகிச்சைப் பகுதிக்காக தமது பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பங்களிப்பை வழங்கு அரசாங்க மருத்துவ பீடங்களில் பீடாதிபதிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி பட்டப் பரீட்சை மற்றும் பல்தேர்வு வினாப்பத்திரத்திற்காக SAITM உடன் இணைதல்.

### 4.2. சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பொறுப்புக்கள்

I. மேற்பார்வை நிறுவனச் செயற்பாட்டில் தலையிடல்.

II. நெ.ப.போ.வை தேவையான மருத்துவ மற்றும் மருத்துவம்சாரா பதவியினரின் நியமனங்கள்

III. அரசாங்க வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிரேட்ட ஆலோசகர்களை பரீட்சைக்கான வெளி கண்காணிப்பாளர்கள் என்றவகையில் விடுவிப்பதன் ஊடாக SAITM தனது இறுதி MBBS பரீட்சையினை நடாத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.

IV. மாணவர்களின் நெருக்கடிகளை தளர்த்தும் வரைஅவிசாவளை, முல்லோரியா மற்றும் ஹொரண தள வைத்தியசாலை மற்றும் 1.5.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாணத்தில் இனங் காணப்பட்டுள்ள வைத்தியசாலைகள் மற்றும் கடுவெல MOH பிரதேசம் மற்றும் ஏனைய MOH பிரதேச மாணவர்கள் சிகிச்சைப் பயிற்சிக்கு அனுப்புவதற்காக தேவையான வசதிகளை வழங்குதல்.

V. நெ.ப.போ.வை தொழிற்பாட்டு மற்றும் மூலதனச் செலவுகளைப் பொறுப்பேற்றல்.

VI. SAITM மருத்துவ பட்டதாரிகளை இனங்காணல். தற்பொழுதுள்ள அளவுகோலிற்கேற்ப SAITM இலுள்ள மருத்துவப் பட்டதாரிப் பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல்.

VII. இலங்கை மருத்துவ சபையின் செயற்குழு உறுப்பினர் என்ற ரீதியில் SAITM இன் மருத்துவ பீடாதிபதியினை நியமித்தல்.

### 4.3 இலங்கை மருத்துவ சபையின் பொறுப்புக்கள்

(i) SAITM இன் கண்காணிப்பு நிறுவன நடவடிக்கைகளுக்கு தலையீடு செய்தல்.

(ii) SAITM இறுதி மருத்துவப் பட்டப் பரீட்சையினை நடத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.

(iii) SAITM இன் மருத்துவ பீடாதிபதி வழியாக SAITM இற்காக வசதிகளை வழங்கல்.

### 4.4 SAITM இன் பொறுப்புக்கள்

(i) நெவில் பர்னாந்து வைத்தியசாலையில் ஒழுங்கான சிகிச்சைப் பயிற்சியினை SAITM மாணவர்களுக்கு வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு கையளித்தல்.

(ii) 20 வீத முழுமையான புலமைப் பரிசில்களை சகல மாவட்டங்களிலும் அரசாங்க மருத்துவ பீடத்திற்கு நுழைவதற்காக மிகவும் சொற்ப வெட்டுப்புள்ளியில் தகைமை பெறாத உள்நாட்டு மாணவர்களுக்கு வழங்குதல்.

(iii) சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் குறிப்பிடப்படுகின்ற வழிகாட்டல்களைப் பின்பற்றல்.

(iv) கண்காணிப்பு நிறுவனத்தின் வசதியான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக பூரண ஒத்துழைப்பினை வழங்கல்.

## 5. இலங்கை தனியார் மருத்துவ விஞ்ஞான கல்வியின் எதிர்கால முன்னேற்றம் தொடர்பிலான நீண்டகால முன்னெடுப்பு

### 5.1 பின்னணி

உயர் தரத்தின் பின்னர் உயர் கல்விக்காக தகைமையுள்ள மாணவர்கள் தமது விருப்பத்தின் படி பாடத் துறைக்கான சந்தர்ப்பங்களை தேடிக்கொள்ளல் வேண்டும். மருத்துவ விஞ்ஞானத்தைத் தவிர, இலங்கை மாணவர்களுக்கு பொறியியல், தகவல் தொழிநுட்பம், முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தொழில்சார் பாடநெறிகளுக்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

தற்பொழுதுள்ள ஒரேயொரு மருத்துவக் கல்லூரியாக SAITM மட்டும் உள்ளது. 20 வீத முழுமையான புலமைப் பரிசில்களை வழங்கி அரசாங்க மருத்துவக் கல்லூரிக்கு மிகச் சொற்ப வித்தியாசத்தில் தகைமை பெறாத குறைந்த்து 20 மாணவர்கள் மட்டும் அனுமதிக்க முடியும். எதிர்காலத்தில் நிறுவுகின்ற தனியார் மருத்துவக் கல்லூரிகளும் இந்த கொள்கையினைப் பின்பற்ற முடியும்.

### 5.2 தனியார் மருத்துவ கல்லூரியொன்றை நிறுவுதல்

அரசாங்க மருத்துவ கல்லூரியில் வரையறுக்கப்பட்ட இடங்கள் இருப்பதனால் கல்விக் குழு என்ற ரீதியில் (மருத்துவ விஞ்ஞான ஆசிரியர்கள்) அரசாங்கத்தின் தலையீட்டினால் தனியார் பிரிவின் நிதியத்தின் மூலம் மற்றும் கட்டணங்களை அறவிட்டு மருத்துவக் கல்லூரியினை ஆரம்பிப்பதெனத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக கொழும்புப் பல்கலைக்கழகம் (சர்வதேச மாணவர்களை இலக்காகக் கொண்டு கொழும்பு சர்வதேச மருத்துவக் கல்லூரியாக) மற்றும் பேராதெனிய பல்கலைக்கழகம் ஆகியவற்றில் வளங்கள் உள்ளதாகவும் மற்றும் சிறந்த கல்வி நிறுவனம் என்ற ரீதியில் சர்வதேசத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதாலும் மிகவும் பொருத்தமாக உள்ளது. இவ் வியாபாரத்தில் கிடைக்கின்ற இலாபம் அரசாங்க மருத்துவ பீடங்களின் வசதிகளினை மேம்படுத்துவதற்கு ஈடுபடுத்த முடியுமாயிருப்பது அனுகூலமாகும்.

இலகு கடன் உத்தேச முறையினை அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கை மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியும்.

காலி, ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் களனி போன்ற ஏனைய முழுமைபெற்ற பீடங்களுக்கு இணைந்த புதிய மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க முடியும். அரசாங்கத்திற்கு நிதியங்களை வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்புடன் மிகவும் வசதியான, மனித வலு மற்றும் பாரியளவிலான நோயாளிகள் இருக்கின்ற மாவட்ட பொது வைத்தியசாலைகளை மேம்படுத்த ஆரம்பிக்க முடியும். தற்பொழுது

பின்வரும் வைத்தியசாலைகளில் எந்தவொரு மருத்துவ பீடக் கல்வியினை வழங்குவதற்கு பயன்படுத்தப்படவில்லை.

கொழும்பு மருத்துவ பீடம் – நீர்கொழும்பு வைத்தியசாலை

பேராதெனிய மருத்துவ பீடம் – நுவரெலியா வைத்தியசாலை

காலி மருத்துவ பீடம் – மாத்தறை வைத்தியசாலை

ஜயவர்தனபுர மருத்துவ பீடம் – களுத்துறை வைத்தியசாலை

ராகம மருத்துவ பீடம் – கம்பஹா வைத்தியசாலை

## 5.3 அரசாங்கத்திற்கு கிடைக்கும் நன்மைகள்

(i) நேரடியாக அல்லது மறைமுகமாக அதிகமான தொழிவாய்ப்புகள் உருவாகுதல் – மருத்துவர்கள் மற்றும் தாதிகள் கூட கற்கை மற்றும் கல்விசார் பணியாட்டொகுதி

(ii) உள்நாட்டு மாணவர்கள் மருத்துவக் கல்விக்காக வெளிநாடுகளுக்கு செலவழிக்கின்ற பணத்தினால் இல்லாமல் போகின்ற அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும்.

(iii) நாட்டிற்குள அந்நியச் செலாவணியை உற்பத்தி செய்தல் – திறமையான விற்பனை முறையினைப் பயன்படுத்தி வெளிநாட்டு மாணவர்களை ஈர்க்கக்கூடிய விதத்தில் நாட்டிற்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும். (அதிகமான மத்தியகிழக்கு நாடுகள் மற்றும் ஏனைய முஸ்லிம் நாடுகளில் மேற்கத்திய நாடுகளை விரும்பாததனால் எமக்கு அவர்களை இலகுவாக ஈர்த்துக்கொள்ள முடியும்) எமது நாட்டு நோயாளிகள் ஒத்துழைப்புத் தன்மை உள்ளதாலும் மற்றும் சமயம் காரணமாகவும் ஏனைய நாடுகளில் கிடைக்காத அனுபவங்கள் எமது நாட்டில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், அதிகமான எமது நாட்டு நோயாளிகளுக்கு ஆங்கில அறிவு இருப்பதனாலும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள முடியும்.

(iv) தற்பொழுது தமது சம்பளங்கள் பற்றிய திருப்தியடையாத அரசாங்க பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கான சுமையினை குறைத்துக்கொள்ள முடியும். மேலதிக நேரக் கொடுப்பனவு போன்ற படிகளுடன் அரசாங்க வைத்தியர்களின் சம்பளம் அரச மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரின் சம்பளத்தின் இருமடங்காகும். இதன் காரணமாக மருத்துவ பீட

ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்வது மிகவும் கடினமாக உள்ளது. இந்த தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு வெளிப்புற விரிவுரையாளர்களாக நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களுக்கு முடியும்.

(v) மாவட்ட வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக மேம்படுத்துவதன் மூலம் இப் பிரதேசங்களில் வாழகின்ற நோயாளிகளுக்கும் நன்மை கிடைக்கும். நரம்பு, சிறுநீரக நோய்கள் போன்ற அதிகமானவற்றிற்கு நிபுணத்துவ வைத்தியர்கள் மற்றும் நிபுணத்துவமற்ற வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

## 6. முடிவுகளும் சிபாரிசுகளும்

### 6.1 முடிவுகள்

(i) நாட்டிலுள்ள வைத்தியர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு உடனடித் தேவையாக உள்ளது.

(ii) வரையறுக்கப்பட்ட இடவசதிகள் இருப்பதனால் மருத்துவ பீடங்களுக்கு தகைமை பெறுகின்ற அதிகமான மாணவர்களுக்கு அரசாங்க மருத்துவ பீடங்களில் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைக்காமை.

(iii) புதிதாக மருத்துவ பீடங்களை விஸ்தரிப்பதற்கு அல்லது ஆரம்பிப்பதற்கு அரசிற்கு முடியாதுள்ளது.

(iv) நாட்டிற்கு பாரியளவில் அந்நியச் செலாவணியில் இழப்பை ஏற்படுத்தும் பாரிய எண்ணிக்கையிலான மாணவர்கள் மருத்துவக் கல்விக்காக வெளிநாடு செல்லல்.

(v) இலங்கையின் மருத்துவக் கல்விக்காக இருக்கின்ற சந்தர்ப்பங்களை விஸ்தரிப்பதற்கு தேவை ஏற்பட்டுள்ளது.

### 6.2 சிபாரிசுகள்

(i) தனியார் பிரிவின் பங்களிப்புடன் இலங்கையில் புதிய மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பித்தல்.

(ii) SAITM இன் மருத்துவக் கல்லூரியின் செயற்பாட்டினை ஒழுங்குமுறைப்படுத்தல்.

(iii) தெளிவான கொள்கைகளின் மூலம் மற்றும் இந்த நிறுவனங்களின் மூலம் மக்களுக்கு கிடைக்கின்ற நன்மைகள் எனும் பிரேரணையினை மக்களுக்கு வழங்கி தனியார் மருத்துவ விஞ்ஞானத்திற்காக இருக்கின்ற தடைகளை நீக்கல்.